***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

-----

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.***

| | | |
|---|---|---|
| *Case Number* | : | CC.251/2023 |
| *Prosecution Witness* | : | அ.சா. 1 |
| *Name* | : | இந்திராணி |
| *Father's/Husband Name:* | : | செல்வராஜ் |
| *Address :* | : | 272, எளம்பலூர் ரோடு, மேட்டுத் தெரு, பெரம்பலூர். |
| *Age* | : | 52/2024 |

<u>தேதி: 20/02/2024</u>

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **(1,5,6 எதிரிகள் ஆஜர், 3 ஆம் எதிரி ஆஜர் இல்லை.)கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந் வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். 1995 ஆம் ஆண்டு எனது பெயரில் தாயுமானவர்

என்பவரிடமிருந்து சர்வே எண் 384/6 அமைந்துள்ள 2850 சதுர அடி நிலத்தை ஆவண எண் 3657/1995 ன் மூலம் கிரயம் பெற்றேன். 1996 ஆம் ஆண்டு அந்த இடத்திற்கு எனது பெயரில் பட்டாவும் பெற்றேன். அந்த பட்டா எண் 3140. 2011 ஆம் ஆண்டு அந்த இடத்தில் நான் கம்பி வேலி இட்டேன். ஆனால் அதற்கு மறுநாள் யாரோ அந்தக் கம்பி வேலியை அப்புறப்படுத்தி விட்டனர். எனது கம்பிவேலியை யாரோ எடுத்துவிட்டனர் என நான் 2012 ஆம் ஆண்டு நில மோசடி பிரிவில் புகார் கொடுத்தேன். எங்களது இடத்தை சோமண்டாபுதூரைச் சேர்ந்த ரங்கராஜ் என்பவரின் மகன் பச்சைமுத்து என்பவர் பெயரில் உள்ளதாக கம்ப்யூட்டரில் சரிபார்த்த போது தெரியவந்தது. மேலும் அந்தப் பத்திரத்தை பெரியசாமி மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பமிட்டு ஏற்படுத்தியுள்ளனர். அதற்கு சப் ரெஜிஸ்டாரும், பெரியசாமி மற்றும் கலியமூர்த்தி ஆகியோர் உடந்தையாக இருந்தது தெரியவந்தது. அதனால் தான் நான் இந்தப் புகாரைக் கொடுத்தேன்.

PUBLIC

நானும் எனது கணவரும் சேர்ந்து அந்தப் புகாரைக் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரை நான் தான் கொடுத்தேன் ஆனால் யார் எழுதினார் என எனக்குத் தெரியவில்லை. நான் சொல்ல சொல்லத்தான் அந்தப் புகார் கொடுக்கப்பட்டது. அந்தப் புகாரில் உள்ள கையொப்பம் எனது கணவருடையது.

<u>**குறுக்கு விசாரணை 1,3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் :**</u>

1. புகாரில் தேதி 16/05/2012 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தான் இந்தப் புகார் கொடுக்கப்பட்டதாக காண்பிக்கப்படுகிறது என்றால் சரிதான். 6/8/2012 அன்று இந்தப் புகார் காணப்படுகிறது என்றால் சரிதான். அந்தப் புகாரில் செல்வராஜ் என்பவர் கையொப்பமிட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். 16/5/2012 என அடித்தல் திருத்தல்களுடன் காணப்படுகிறது என்றால் சரிதான். நான் கிரயம் செய்யப்பட்டதாக கூறப்படும்

பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் நகல் கொடுத்துள்ளேன். நீதிமன்ற நேரமின்மையால் கூடுதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

*Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.*

*sd/-*
*Judicial Magistrate No.I,*
*Perambalur.*

JM-I, PBLR